**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**CC.237/2018**

**Prosecution Witness : 7**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : தெய்வம் | **Caste** | : |
| **Father's Name** | : பெரியசாமி | **Calling** | : கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : **58/2025** |
| | | **Dated** | : **17.03.2026** |

**17.03.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 11 **திரு. தெய்வம்**. பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 7** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2ம் எதிரி ஆஜர் . 1ம் எதிரி இறப்பு . Charge abated.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.08.2017ம் தேதி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நியைலத்தில் பணியில் இருந்தபோத முதல் நிலைக்காவல் மோகனசுந்தரம் திண்டுக்கல் MSP பள்ளி பின்புறம் திருநகரைச்சேர்ந்த பாலசுப்பிரமணியின் மனைவி தமிழ்ச்செல்வி நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று நிலைய குற்ற எண்.630/2017 சட்டப்பிரிவு 379 இதச வாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வழக்கினை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் அழகுராஜா 07.30 மணிக்கு சம்பவ இடம் சென்று பிரபு, வெங்கட கிருஷ்ணன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைவிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்பு சாட்சிகள் தமிழ்செல்வி , அந்தோணி ராஜ், பாண்டி , சின்னத்துறை ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவர எதிரிகளை தேடிவந்த நிலையில் 01.09.2017ம் தேதி 13.30 மணிக்கு போலிஸ் பார்டியுடன் MSP பள்ளி ரயில்வே கேட்அருகே வாகனத்தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது சந்தேகத்திற்கிடமாக TN 57 AZ 1855 Hero Shine இருசக்கர வாகனத்தில் வந்த இருவரை நிறுத்தி விசாரிக்க எதிரி கார்த்திக் தாமாக முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டதால் காரணம் கூறி கைதுசெய்தும் அவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 13.45 மணிக்கு சாட்சிகள் பாலசுப்பிரமணி, ஜேம்ஸ் ராஜா முன்னிலையில் பதிவுசெய்து எதிரி ஆஜர் செய்த TN 57 AZ 1855 Hero Shine இருசக்கர வாகனத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய குற்ற எண்.630/2017 தொடர்புடையது தெரியவந்ததை அடுத்து எதிரி அடையாளம் காட்டிய ராமச்சத்திரன் என்பவரை காரணம் கூறி கைது செய்து எதிரி ஆஜர் செய்த சுமார் 5 பவுன் தங்க செயினை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி கைப்பற்றி வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்பு எதிரிகள் மற்றும் வழக்குச்சொத்துகளுடன் நிலையம் வந்து பாராவசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மு.நி.கா.மோகனசுந்தரம் சார்பு ஆய்வாளர் அழகுராஜா ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.வழக்குச்சொத்தை படிவம் 91 மூலம் கனம் நீதிமன்றத்தில் ஒப்புவித்து RPR.No.213/2017 ஆக பதிவுசெய்தேன். பின்பு எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது 379 இதசன் படி குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 படிவம் 91 அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சொல்வதுபோல் சொன்ன நாள் நேரத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் எப்போதோ நடந்த சம்பவத்திற்கு புகார்தாரருக்கு சாதகமாக மேற்கண்ட தேதியில் புகார் தயாரிக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டு வழக்குச்சொத்தான 5 பவுன் செயின் புகார்தாரருடையதே இல்லை என்றும் வேறு எங்கோ கைப்பற்றிய சொத்தினை இவ்வழக்கின் புகார்தாரருக்கு சாதகமாக கைப்பற்றியதாக பொய்யாக புகார் தயார்செய்யப்பட்டுள்ளது என்றும் இவ்வழக்கில் அத்தாட்சி மற்றும் பார்வை மகஜர் வரைபடம் அனைத்தும் வழக்கிற்காக காவல்நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றும் வழக்கிற்கும் 2ம் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரியிடம் எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தில் 2ம் எதிரியிடம் வழக்குச்சொத்தை கொடுத்துவைத்திருக்கிறேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிட்டுள்ளது. 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னை கூட்டிப்போனால் நாங்கள் செயினை பறித்த இடத்தை அடையாளம் காட்டுவேன் என்று மட்டும் தான் குறிப்பி்ட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குச்சொ்த்தை அத்தாட்சி மூலம் கைப்பற்றியதற்கு 1ம் எதிரியிடம் எந்த கையொப்பமும் வாங்கவில்லை என்றால் சரிதான். 2ம் எதிரி செயினை பறிக்கப்பட்டபோது உடன் இல்லை என்றால் சரிதான். சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் 2ம் எதிரிக்கும் வழக்குச்சொத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் 2ம் எதிரியிடடமிருந்து எவ்வித வழக்குச்சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**
இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.03.17 14:12:52 +0530

Judicial Magistrate No.II
Dindigul.